செய்தி வெளியீடு எண்:599 நாள்:12.08.2021

# செய்தி வெளியீடு

## தமிழ் அகராதியியல் நாள் விழா –2021

## அகராதி ஆய்வு மலருக்குக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன!

**கடைசி நாள் : 17.09.2021**

'தமிழ் அகராதியியலின் தந்தை' என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8–ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாளாகக்' கொண்டாடப்படுவதோடு, நவம்பர் 08, 09 ஆம் நாள்களில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டுவருகிறது.

நடப்பு 2021–2022 ஆம் ஆண்டிற்கான பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்க ஆர்வமுள்ள தமிழார்வலர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் உட்பட அனைவரும் பின்வரும் பொருண்மைகளில் 5 பக்க அளவில் ஆய்வுக் கட்டுரைகளை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கு வழங்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளில் தேர்வுக்குழுவால் தெரிவுசெய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே **'தமிழ் அகராதியியல் நாள்'** சிறப்பு ஆய்வு மலரில் இடம் பெறும்.

**<u>தலைப்புகள்:</u>**

1.தொல்காப்பியம் வகுக்கும் அகராதியியல் கோட்பாடு 2.தொல்காப்பியம் கூறும் சொற்பிறப்பியல் கோட்பாடு 3.சொல்லாக்க நெறிமுறைகளில் புதிய உத்திகள் 4.அறிவியல் தொழில்நுட்பத்தில் தமிழ்க் கலைச்சொற்கள் 5.அலுவல்சார் தமிழ்க் கலைச்சொற்கள் 6.கணினித் தமிழ்வளர்ச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும் 7.தமிழ் அகரமுதலிகளின் வரலாறும் வளர்ச்சியும் 8.தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களில் மறைந்திருக்கும் தமிழர் வரலாறும் பண்பாடும் 10. தூயதமிழில் சித்த மருந்துகளின் பெயர்கள் 11.உணவுப் பொருள்களின் தமிழ்ப்பெயர்கள் 12.சொல் மேலாண்மை 13.எந்திரப் பொருள்களின் தமிழ்ப்பெயர்கள் 14.மென்பொருள்களில் தமிழ்க் கலைச்சொல் பயன்பாடு 15. இணையத்தில் ஆங்கில எழுத்தில் தமிழ் – நன்மை தீமைகள் 16.மின்னூல்கள், மின்னிதழ்களில் நல்ல தமிழ்ப் பயன்பாடு 17.வணிக நிறுவனங்களில் தமிழ்ப்பெயர்கள் 18.தமிழ்வளர்ச்சியில் கணினித் தமிழ் மென்பொருளின் தேவைகள் 19.இல்லங்களில் தூயதமிழ்ச் சொற்கள் 20.மறைந்துபோன தமிழ்ச் சொற்களும், மீட்டுருவாக்கமும் 21. வேளாண் துறையில் காணப்படும் தூயதமிழ்ச்சொற்கள் ஆகிய தலைப்புகளில் கட்டுரைகளை ஏ4 அளவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் மருதம் ஒருங்குறி (யுனிகோடு) எழுத்துருவில், எழுத்தளவு 11 புள்ளி, வரி இடைவெளி 1.5–இல், சொற்செயலிக்கோப்பாக (Word Document file) agarathimalar2020@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், **"இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028"** என்ற இயக்கக முகவரிக்கும் 17.09.2021–ஆம் நாள் மாலை 5.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.

கட்டுரையாளர்கள் கட்டுரையுடன் முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி, கடவுச்சீட்டு அளவிலான (Passport size Photo) ஒளிப்படம், ஒரு பக்க அளவில் தன்விளக்கக் குறிப்பு ஆகியவற்றையும் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும். மேலும், அனுப்பப்படும் ஆய்வுக் கட்டுரை இதற்கு முன் வேறு எந்த இதழ்களுக்கும் வழங்கப்பெறவில்லை என்ற உறுதிமொழியையும் தன்னொப்பமிட்டு (self attested) அனுப்ப வேண்டும். கட்டுரைகள் அடிக்குறிப்புகள் மற்றும் துணைநூற்பட்டியலுடன் அமைதல் வேண்டும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9